செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under Ministry of Education, Government of India)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113
Website : www.cict.in E-Mail : director@cict.in
Phone : 044 - 22540124

**நாள்: 18.11.2021**

**பயிலரங்கம் - 17**

**அகராதியியல் புலம்**
**நடத்தும்**

# இக்காலத் தமிழில் தமிழ்ச் செவ்விலக்கிய மொழிக்கூறுகள்

**(16.12.2021 – 22.12.2021)**

**<u>அறிவிப்பும் அழைப்பும்</u>**

மொழிக்கு வளமை சேர்ப்பதில் பேச்சுவழக்கான கிளைமொழிக்கும் பங்கு உள்ளது. கிளைமொழிச் சொற்களை இலக்கியச் சொற்களோடு ஒப்பாய்வு செய்கின்ற பொழுது கிளைமொழியின் தனிச்சிறப்பும், இலக்கிய வழக்கோடு ஒன்றிப்போகும் தன்மையும் வெளிப்படும்.

**“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்” (தொல்: 999)**

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் தமிழ் மொழியில் காணப்படும் பேச்சுவழக்கு, செய்யுள் வழக்கு என்ற இருவகை வழக்குகளை விளக்குகிறார். பேச்சுவழக்கு என்பது கற்றோர், கல்லாதோர் எனும் வேறுபாடின்றி எல்லா மக்களும் தெளிவாகப் பொருள் புரிந்து கொள்ளுமாறு எளிய சொற்களால் அமைந்ததாகும். செய்யுள்வழக்கு என்பது ஓரளவு மொழி பயின்றோர்க்கு மட்டுமே புரிவதாகும். இவ்விரு மொழியமைப்பில் பேச்சுவழக்கினை அடியொற்றியே வட்டார வழக்குகள் காணப்படுகின்றன. இவ்வகையில் நோக்குங்கால் பண்டைய வழக்குச் சொற்களை அடியொற்றியே தமிழ்ச் செவ்விலக்கியங்கள் காணப்படுகின்றன எனலாம்.

**“விளங்கொளி மேனி விரிசடை யாட்டி” (மணி. பதி: 2)**

இச்செய்யுள் அடியில் வரும் மேனி என்னும் சொல் உடம்பு என்னும் பொருளைக் குறிக்கின்றது. இச்சொல் இதேபொருளில் இன்றளவிலும் வட்டார வழக்குகளில் வழங்கப்படுகின்றது. தொழில், கல்வி, போர் போன்றவற்றால் புலம் பெயர்தல், நாகரிக வளர்ச்சி, பிறமொழித்தாக்கம் ஆகிய காரணங்களால் தமிழ்ச் சொற்கள் அழிந்து வருகின்றன. தமிழ்ச் செவ்விலக்கியச் சொற்கள் அழிந்து போகாவண்ணம் காக்கும்

பொருட்டு வட்டார வழக்குச் சொல்லாய்வினைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

ஆகவே, இக்காலத் தமிழில் செவ்விலக்கிய மொழிக்கூறுகளான உவமைகள், சொற்கள், மரபுத்தொடர்கள், பழமொழிகள், இலக்கண மரபு, இலக்கிய வகை ஆகியவை குறித்து ஆராயப்பட வேண்டிய தேவை உள்ளது. எனவே இவ்வாய்வினை வளப்படுத்தும் நோக்குடன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஏழு நாள் பயிலரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் தமிழ் இலக்கியம், இலக்கணம், வழக்காற்றியல், அகராதியியல் துறை சார்ந்த அறிஞர்கள் உரையாற்ற உள்ளனர். தமிழ் இலக்கியம், இலக்கணம், வழக்காற்றியல், அகராதியியல் துறைசார் பேராசிரியர்களை இப்பயிலரங்கில் பங்குபெற்றுப் பயனடையுமாறு அழைக்கிறோம்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 16.12.2021 முதல் 22.12.2021 முடிய ஏழு நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 - 01.00 & மாலை: 02.00 - 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshoplexi@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 09.12.2021. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 10.12.2021 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

**இக்காலத் தமிழில் தமிழ்ச் செவ்விலக்கிய மொழிக்கூறுகள்**

பயிலரங்கம்

**(16.12.2021 – 22.12.2021)**

**விண்ணப்பப் படிவம்**

| நிழற்படம் |
|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பதவி/பணிநிலை<br>நிரந்தரம்/தற்காலிகம் | | |
| 3. | பிறந்த நாள்/ வயது | | |
| 4. | பாலினம் | | |
| 5. | வகுப்பு (✓ செய்க) | | பொது [ ] இ.பி.வ. [ ] பட்டியல் இனத்தவர் [ ] |
| 6. | கல்வித் தகுதிகள் | | |
| 7. | பணியில் சேர்ந்த நாள் | | |
| 8. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவன முகவரி<br>(தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 9. | இல்ல முகவரி<br>(தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 10. | புலன எண் | | |
| 11. | சிறப்பறிவு பெற்றுள்ள துறை | | |
| 12. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |
| 13. | தாங்கள் பணியாற்றும் கல்வி நிறுவனம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2 (F) மற்றும் 12 (B) அங்கீகாரம் பெற்றுள்ளதா? ஆம்/இல்லை. ஆம் எனில் விவரம் தரப்படல் வேண்டும் | | |
| 14. | செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா?<br>ஆம் / இல்லை.<br>ஆம் எனில் விவரம் தருக. | | |

நாள் : **(கையொப்பம்)**

இடம்:

துறைத்தலைவர் / முதல்வர் / பதிவாளர்

உரிய முத்திரையுடன் கையொப்பம்